**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.963/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | :சதிஸ்குமார் | Caste | : |
| Father Name | :மனோகரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(04.07.2025)**
**முதல் விசாரணை**

நான் திருமங்லத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சீமா கார்ஸ் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மனோகரன் எனது அப்பா ஆவார். கடந்த 23.09.2021 அன்று காலை 8 மணியளவில் எனது அப்பா மனோகரன் வழக்கம்போல் தான் பணி செய்யும் மேட்டுர்டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் பணி செய்வதற்காக கிளம்பி சென்றார், சம்பவத்தின்போது எனது அப்பா மேற்படி நிறுவனத்தில் காவலாளியாக பணி செய்து வந்தார். எப்பொழும் பணி முடித்து இரவு 7 மணியளவில் அப்பா வீட்டிற்கு திரும்பி வருவார். மேற்சொன்ன சம்பவ தேதியில் எனது அப்பா 7 மணியாகியும் வீட்டிற்கு வரவில்லை. அன்று மழை பெய்துகொண்டிருந்தது. மேற்படி எனது அப்பா பணி செய்த நிறுவனத்தின் மேற்பார்வையாளர் பாலமுருகன் எனது அம்மா சின்னமாவிற்கு போன் செய்து அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது என்றும் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளோம் என்று தகவல் கூறினார். என்ன நடந்தது என்று விசாரித்த போது மழை பெய்து கொண்டிருந்தது என்றும் பார்சல் ஏற்றும் வண்டியான பொலிரோ பிக்அப் வாகனத்தை ரிவர்ஸ் எடுக்கும் போது எனது அப்பா பின்னால் இருந்து ரிவர்ஸ் எடுப்பதற்காக பார்த்துகொண்டிருந்த போது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் கார்த்திக் என பின்னர் கேட்டு தெரிந்து

கொண்ட நபர் என் அப்பா மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என கூறினார்கள். நானும் எனது அம்மாவும் திருமங்கலம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது  எனது அப்பாவின் வலது பக்க தலை, கை , கால் ஆகிய பகுதி முழுவதும் இரத்தக்காயங்கள் ஏற்பட்டது. இடதுபக்க கையில் காயம் இருந்தது. எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்,. எனது அப்பா ஒரு வாரம் சிகிச்சையில் இருந்து 30.09.2021 அன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக நான் போலிசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். அந்த புகாரை நான் தான் எழுதினேன். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு யாரும் சம்பவம் பற்றி யாரும் தகவல் சொல்லவில்லை. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நானும் எனது அம்மாவும் எனது அப்பாவை மருத்துவமனையில் தான் பார்த்தோம். என் அப்பா என்ன வேலை செய்தார் எத்தனை மணி வரை வேலை பார்ப்பார் என்று எனக்கு தெரியாது. போலிசார் சொல்லி தான் நான் புகார் எழுதினேன் என்றால் அவர்கள் என்ன நடந்தது என்று அதை அப்படி எழுதிக்கொடு நான் எழுதிக்கொடுத்தேன். எதிரியின் பெயரை போலிசார் சொல்லியதின் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் நேரடியாக எதிரியை காண்பித்து அவரது பெயரையும் தெரியும் அவர்கள் சொல்லிதான் தெரியும். புகார் கொடுத்ததற்கு பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அதன் பிறகு நேரடியாக நீதிமன்றத்திற்கு தான் வந்தேன் என்றால் இல்லை. அப்பா வேலை பார்த்த விபரம் சம்பந்தமாக காவல் நிலையம் சென்று வந்தேன். எனது அப்பா விபத்திற்கு இந்த எதிரிக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும் எனது அப்பா தான் வயது முதிர்வின் காரணமாக தடுமாறி கீழேவிழுந்துவிட்டார் என்று சொன்னாலும் சரியல்ல. மோட்டார்

வாகன விபத்து காப்பீடு தொகை பெறுவதற்காக இந்த எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.963/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சின்னம்மாள்** | Caste | : |
| Father Name | : **க/பெ.மனோகரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(04.07.2025)**
**முதல் விசாரணை**

நான் திருமங்லத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மனோகரன் எனது கணவர் ஆவார். அ.சா.1 எனது மகன் ஆவார். கடந்த 23.09.2021 அன்று காலை 8 மணியளவில் மேட்டூர் டிரான்ஸ்போர்ட்டில் வேலைக்காக செல்வதற்காக சென்றார். சம்பவத்தின் போது மேற்படி நிறுவனத்தில் எனது கணவர் காவலாளியாக பணி செய்து வந்தார். அன்று இரவு 8 மணியளவில் மேற்படி நிறுவனத்தில் மேற்பார்வையாளர் பாலா எனக்கு போன் செய்து எனது கணவர் மனோகரனுக்கு உடம்பு சரியில்லை என்றும் திருமங்கலம் அரசு மருத்துமவனையில் சேர்த்துள்ளோம் என சொல்லி கூறினார்கள். என்ன நடந்தது என விசாரித்ததற்கு விபத்து நடந்ததாக கூறினார்கள். நானும் எனது இளையமகன் சதிஸ்குமார் அ.சா.1 ம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது கணவரை பார்த்த போது அவருக்கு வலதுபக்க கால் பகுதி முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக எனது கணவரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவ தினத்தின் போது மழை பெய்துகொண்டிருந்தது என்றும் அதனால் தண்ணீர் தேங்கியிருந்தது என்றும் அதை எனது கணவர் தள்ளிவிட்டுக்கொண்டிருந்த போது மேற்படி டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு சொந்தமான வேனை ஓட்டியவர் பெயர்

தற்சமயம் நினைவு இல்லை. ஓட்டுனர் ஓட்டிவந்து எனது கணவர் இதை கவனிக்காமல் பின்னால் ரிவர்ஸ் எடுக்கும் போது என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. மதுரை ராஜாஜி மருத்துவமனையில் எனது கணவர் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து சம்பந்தமாக எனது மகன் அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக செல்லவில்லை. நான் எனது கணவருக்கு திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துமவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். எனது கணவர் மழை நீரை எடுத்துக்கொண்டிருக்கும் போது விபத்து என்று கேள்விபட்டேன். அந்த சம்பவம் கம்பெனிக்கு உள்ளேயா வெளியேயா என்ற விபரம் தெரியாது. எனது மகன் தான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். நான் காவல் நிலையம் செல்லவில்லை. எனது மகன் புகார் கொடுத்துவிட்டதால் போலிசார் மருத்துவமனை வரவில்லை. எனது கணவர் இறந்தபின்பும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை.